DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.232/2023 | Deposition of Witness for : PW1 |
| Name : கனியம்மாள் | Father/Husband Name : பெருமாள் |
| Age : 65 | Village : சுப்பிரமணியபுரம் |
| Taluk : ஏரல் | Calling : கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02 June 2026.
A1, A2 present. A3 absent. Petition U/s.317 Cr.P.C/355 BNSS filed and allowed.

**<u>முதல் விசாரணை :-</u>**

1. நான் தற்போது சுப்பிரமணியபுரத்தில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளை தெரியும். 3 ஆவது எதிரியையும் தெரியும். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. **புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அரசு தரப்பில் கோரி, அவ்வாறே அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.</u>**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

2. கடந்த 27.09.2021 ஆம் தேதி காலை சுமார் 06.00 மணியளவில் நான் காலை கடனை கழிப்பதற்காக என் வீட்டில் இருந்து எனது மாடு தொழுவின் பின்பக்கம் உள்ள காட்டிற்கு செல்ல எனது வீட்டு அருகேயுள்ள சந்து பாதை வழியாக நான் சென்று கொண்டிருந்தபோது எனது பக்கத்து வீட்டைச் சேர்ந்த 1 ஆவது எதிரி ராசம்மாள், 2 ஆவது எதிரி லெட்சுமி அவரின் வீட்டு முன்பு முற்றம் தெளித்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. என்னைப் பார்த்ததும் கையில் வைத்திருந்த அலுமினிய வாளியுடன் வந்த 1 ஆவது எதிரி மற்றும், 2 ஆவது எதிரி என்னை வழிமறித்து இது எங்களுக்கு சொந்தமான பாதை எப்படி இந்த பாதையில் நீ வருவாய் உன் புருஷன் வீட்டு இடமா தேவடியா இங்கே வா இந்த பாதையில் நீ வரக்கூடாது என்று கூறி என்னை அவதூறான வார்த்தைகளால் பேசினார்கள் என்றால் சரியல்ல. இருவரும் என்னிடம் சண்டை போடுவதைப் பார்த்த 3 ஆவது எதிரியும் என்னை அசிங்கமான வார்த்தைகளால் பேசினார் என்றால் சரியல்ல. பின்பு 2 ஆவது எதிரி கையில் வைத்திருந்த அலுமினிய வாளியை கொண்டு தலை மற்றும் நெற்றி மற்றும் வலது தோள்பட்டை ஆகிய இடங்களில் ஓங்கி அடித்தும், 1 ஆவது எதிரி வீட்டு ஓட்டினைக்கொண்டு எனது வலது தோள்பட்டையில் அடித்தும், 3 ஆவது எதிரி என்னை வலது இடுப்பு மற்றும்


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.02 18:47:41 +0530

நெஞ்சில் ஓங்கி மிதித்தும் எனக்கு ஊமைக்காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. 2 ஆவது எதிரி எனது வலது கை கம்மலுடன் இழுத்ததில் காது இரண்டாக பிளந்து எனக்கு இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. பின்பு எனது சத்தத்தை கேட்ட எங்கள் ஊரைச் சேர்ந்த முருகன், மூக்கம்மாள் ஆகிய இருவரும் சத்தம் போடவும் 1 முதல் 3 எதிரிகள் என்னைப் பார்த்து இன்னைக்கு நீ தப்பித்துவிட்டாய், நாங்கள் உன்னைக் கொல்லாமல் விடமாட்டோம் எனக் கூறி சென்றுவிட்டனர் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.02 18:47:47 +0530

Judicial Magistrate, Sathankulam.